# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

***OS.No.118/2008*** ***Date: 10.03.2026***

***DW1 –*** ராமசாமி

சாட்சி முன்னிலையானதின் பேரில் 12, 13, 16 முதல் 22 மற்றும் 26ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

என் மனைவி தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கான விபரங்கள் நான்தான் சொன்னேன். 16 முதல் 22 பிரதிவாதிகள் ஆரம்பத்தில் வழக்கில் சேர்க்கப்படவில்லை. அவர்களாகவேதான் மனு தாக்கல் செய்து தரப்பினர்களாக சேர்ந்துள்ளார்கள் என்றால், சரிதான். 16 முதல் 22 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்று நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண் 94ல் உள்ள நிலம் 1985ல் பாகம் பிரிக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1 வம்சாவழி பட்டியல் சரியானதுதான். அதில் செல்லப்பகவுண்டரின் குடும்பத்தார் காண்பிக்கப்படவில்லை என்றால், சரிதான். ஆனால் என் முதல் விசாரணையில் உள்ள வம்சாவழிப் பட்டியலில் செல்லப்ப கவுண்டரின் குடும்பத்தையும் காண்பித்துள்ளேன். இரண்டில் எது சரியானது என்றால், இரண்டும் சரியானதுதான். தாவா சொத்தில் சின்னாகவுண்டருக்கு 2/8 பாகம் உரிமை உள்ளது என வழக்குரையில் சொல்லியுள்ளதை நான் எனது எதிர் வழக்குரையில் மறுப்பு சொல்லியிருந்தால், அது தவறு. என் மனைவியுடன் கணேசன் என்பவர் பிறந்து அவர் பின்னிட்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான். கணேசன் மனைவி நீலாவதி. அவர் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் விடுதலை பாக பாத்திய பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். 12.06.1991ல் என் மாமியார் பழனியம்மாள், அவரது மகன் கணேசன் ஆகியோர் சேர்ந்து கிரிட்டேஜ் நிறுவனத்திற்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் என் மனைவியும், 11ம் பிரதிவாதியும் கையெழுத்து செய்யவில்லை என்றால், சரிதான். அந்த கிரைய ஆவணம் பொதுவில் 1/16 பாகத்திற்குதான் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.2 பட்டாவில் முதலாவதாக உள்ள வருதப்பகவுண்டர் மகன் செல்லப்பகவுண்டரின் வாரிசுகள்தான் 16 முதல் 22 பிரதிவாதிகள் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- ராமசாமி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.